| Roll No. | | | | | | | | | | | | Serial No. of Q. C. A. B. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 50 + 28 = 78 ] [ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 16

Total No. of Questions : 50 + 28 = 78 ] [ Total No. of Printed Pages : 16

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T** **ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು**

**Code No. : 10-T** **Subject : First Language — TAMIL**

ದಿನಾಂಕ : 30. 03. 2009 ] [ Date : 30. 03. 2009

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 10-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 1-30 ರವರೆಗೆ ] [ Time : 10-30 A.M. to 1-30 P.M.

ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 125 ] [ Max. Marks : 125

## FOR OFFICE USE ONLY

### PART – A

| Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | | 10. | | 19. | | 28. | | 37. | | 46. | |
| 2. | | 11. | | 20. | | 29. | | 38. | | 47. | |
| 3. | | 12. | | 21. | | 30. | | 39. | | 48. | |
| 4. | | 13. | | 22. | | 31. | | 40. | | 49. | |
| 5. | | 14. | | 23. | | 32. | | 41. | | 50. | |
| 6. | | 15. | | 24. | | 33. | | 42. | | × | |
| 7. | | 16. | | 25. | | 34. | | 43. | | × | |
| 8. | | 17. | | 26. | | 35. | | 44. | | × | |
| 9. | | 18. | | 27. | | 36. | | 45. | | × | |

*Total Marks of Part – **A***

### PART – B

| Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 51. | | 56. | | 61. | | 66. | | 71. | | 76. | |
| 52. | | 57. | | 62. | | 67. | | 72. | | 77. | |
| 53. | | 58. | | 63. | | 68. | | 73. | | 78. | |
| 54. | | 59. | | 64. | | 69. | | 74. | | × | |
| 55. | | 60. | | 65. | | 70. | | 75. | | × | |

*Total Marks of Part – **B***

| **Total Marks in words** | | **Grand Total** | |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1. ✓ | | ✓ | ✓ |
| 2. ✓ | | | |
| *Signature of Evaluators* | *Registration No.* | *Signature of the Deputy Chief* | *Signature of the Room Invigilator* |

www.StudyGuideIndia.com

*முக்கிய குறிப்பு :*

i) இந்த வினாத்தாளுடன் கூடிய விடைத்தாள் தொகுப்பு **பகுதி - A** மற்றும் **பகுதி - B** என்ற இரு பிரிவுகளைக் கொண்டது.

ii) **பகுதி - A** 50 வினாக்களையும், **பகுதி - B** 28 வினாக்களையும் கொண்டுள்ளன.

iii) இந்த வினாக்களுக்கான விடைகளை எழுதுவதற்காக இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

iv) **பகுதி - A** -வில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின்படி, சரியான விடையைத் தேர்வு செய்து அதன் கீழ் உள்ள விடை பகுதியில் விடையை எழுதவும்.

v) **பகுதி - B** -யில் உள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்காக, ஒவ்வொரு வினாவிற்கும் போதிய அளவு இடம் விடப்பட்டுள்ளது. அதில் விடையை எழுதவும்.

vi) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி - A

கீழ்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் / முழுமைபெறாத கூற்றுகளுக்கும் ( Incomplete statements ) நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. மிகச் சரியான விடை என்று நீங்கள் கருதுபவற்றை தேர்ந்தெடுத்து அதன் கீழ் உள்ள விடை பகுதியில் விடையை எழுதவும் : 50 × 1 = 50

1. ''தமிழ் கூறும் நல்லுலகம் பெற்ற பேறு'' எனப் போற்றப்படும் நூல்

(A) திருக்குறள் (B) கம்பராமாயணம்

(C) பெரிய புராணம் (D) மணிமேகலை.

*விடை :* ____________

2. முதியோனாக வந்து நல்ல தீர்ப்பு வழங்கியவன்

(A) சேரன் (B) சோழன்

(C) பாண்டியன் (D) பல்லவன்.

*விடை :* ____________

3. ''எங்கள் எஜமானர் உங்கள் பாடலைக் கேட்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்'' இதில் எஜமானர் யார் ?

(A) சுப்பு ஓதுவார் (B) அக்க விநாயகர்

(C) அந்தணர் (D) மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

*விடை :* ____________

4. அமெரிக்காவின் மினி இந்தியா

(A) சான் பிரான்சிஸ்கோ (B) சாந்தா பார்பரா

(C) மிசிசிபி புளோரிடா (D) ஹூஸ்டன்.

*விடை :* ____________

5. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று

(A) இனியவை நாற்பது (B) சூளாமணி

(C) வளையாபதி (D) புறநானூறு.

*விடை :* ____________

www.StudyGuideIndia.com

6. மரங்கள் இறைவனை வாழ்த்த என்ன செய்யும் ?

(A) அசைந்து ஆடும் (B) தளிர்களை உதிர்க்கும்

(C) மலர்களைத் தூவும் (D) விழுந்து வணங்கும்.

*விடை :* ____________________

7. இயல், இசை, நாடகம் – இம்மூன்றும் சேர்ந்தது

(A) முத்தமிழ் (B) மூவிலக்கியம்

(C) முந்நூல் (D) முத்துறை.

*விடை :* ____________________

8. புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும்

(A) வேற்றுமை (B) வஞ்சப்புகழ்ச்சி

(C) பிறிது மொழிதல் (D) தற்குறிப்பேற்றம்.

*விடை :* ____________________

9. காஞ்சிபுரம் வாங்கினான். இதில் உள்ள ஆகுபெயர்

(A) பண்பாகு பெயர் (B) பொருளாகு பெயர்

(C) காலவாகு பெயர் (D) இடவாகு பெயர்

*விடை :* ____________________

10. பதினெட்டாம் நூற்றாண்டின் விலைமதிக்க இயலாத சரித்திர நிதிக் களஞ்சியம்

(A) மனோன்மணீயம் (B) நாட்குறிப்பு

(C) தனிப்பாடல் திரட்டு (D) முக்கூடற் பள்ளு.

*விடை :* ____________________

11. ''அரங்கா நின் பக்கமிருக்க ஒரு நாளும் பறவேன் பறவேனே'' என்றவர்

(A) ஆனந்தரங்கப்பிள்ளை (B) சதாசிவ தேசிகர்

(C) இராம கவிராயர் (D) சீனிவாச கவி.

*விடை :* ____________________

12. தன் மகளுக்குத் திருமணம் செய்ய நினைத்தவர்

(A) இளநாகன் (B) பூங்குன்றன்

(C) நன்னன் (D) அமைச்சன்

*விடை :* ____________________

13. வாழ்த்தல், வைதல் பொருளில் வருவது

(A) ஏவல் (B) வினையாலணையும் பெயர்

(C) வேற்றுமை (D) வியங்கோள்.

*விடை :* ____________________

www.StudyGuideIndia.com

14. கண்ணதாசனின் புனைப் பெயர்களுள் ஒன்று

(A) கோடையிடி (B) வெற்றிக்கொடி

(C) வணங்காமுடி (D) கொடுமுடி.

*விடை :* __________

15. வேய் – இதன் பொருள்

(A) மூங்கில் (B) முத்து

(C) அருவி (D) முரசு.

*விடை :* __________

16. சீவலமங்கைத் தென்கரை நாட்டில் சாய்ந்து கிடப்பது

(A) சூரிய காந்தி (B) செந்நெல்

(C) சந்தன மரம் (D) தயிர்ப்பானை.

*விடை :* __________

17. வளர்ந்து வரும் இன்றைய கலைகளின் அடிப்படையாக அமைவது

(A) மேலை நாட்டுக் கலைகள் (B) வடமொழிக் கதைகள்

(C) நாட்டுப்புறக் கலைகள் (D) புராணக் கதைகள்.

*விடை :* __________

18. தொழிலை மட்டும் குறிக்கும் வினைச்சொல்

(A) காரணப் பெயர் (B) தொழிற் பெயர்

(C) பொருள் பெயர் (D) இடப்பெயர்.

*விடை :* __________

19. குணதிசை என்பது

(A) வடக்கு (B) தெற்கு

(C) கிழக்கு (D) மேற்கு.

*விடை :* __________

20. புராணம் மற்றும் காவிரி ஆற்றின் வர்ணனை பற்றிய பாடல்களைப் பாடி, ஆடும் நடனம்

(A) டொல்லு குனித (B) லாவணி

(C) துடி குனித (D) உம்மதாட்ட.

*விடை :* __________

21. மூன்று சீர்களால் அமைந்த அடி

(A) நெடிலடி (B) அளவடி

(C) சிந்தடி (D) குறளடி.

*விடை :* __________

www.StudyGuideIndia.com

22. அமைதிப்புறா யாருடைய கைகளில் நியாயம் பயின்றது ?

(A) நேரு (B) வர்த்தனமானர்

(C) புத்தர் (D) காந்தி.

விடை : ____________

23. திம்மக்கா தனக்குக் கிடைத்த பரிசினைக் கொண்டு நிறுவியது

(A) பள்ளிக்கூடம் (B) மருத்துவ மனை

(C) அறக்கட்டளை (D) முதியோர் இல்லம்.

விடை : ____________

24. முதன் முதலில் தொழிற்சங்கத்தை நிறுவியவர்

(A) வ. உ. சிதம்பரனார் (B) உ. வே. சாமிநாத ஐயர்

(C) திரு. வி. கல்யாண சுந்தரனார் (D) மகாகவி பாரதியார்.

விடை : ____________

25. உரிச்சொல் எடுத்துக்காட்டு தருக

(A) உறுபசி (B) ஓவாப்பிணி

(C) செறுபகை (D) நெடும்படை.

விடை : ____________

26. ''எத்தனை அழகான மரங்கள்! இத்தனை நாட்கள் இவற்றைப் பார்க்காமல் இருந்து விட்டோமே'' யார் கூறியது ?

(A) சோபியா (B) வேலையாள்

(C) செர்டகாப் (D) டால்ஸ்டாய்.

விடை : ____________

27. குணங்குடி மஸ்தானின் இயற்பெயர்

(A) சையத் சுல்தான் சாகிப் (B) காதிர் மஸ்தான் சாகிப்

(C) சுல்தான் அப்துல் காதிர் (D) அப்துல் சுல்தான் சாகிப்.

விடை : ____________

28. அடிகளிலும் சீர்களிலும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது

(A) முரண் (B) மோனை

(C) எதுகை (D) இயைபு.

விடை : ____________

29. திருக்குறள் தோன்றிய காலம்

(A) கி. பி. முதல் நூற்றாண்டு (B) கி. மு. மூன்றாம் நூற்றாண்டு

(C) கி. மு. முதல் நூற்றாண்டு (D) கி. பி. இரண்டாம் நூற்றாண்டு.

விடை : ____________



www.StudyGuideIndia.com

30. சின்னப்பிள்ளை தொடங்கிய நிறுவனம்

(A) தானம் அறக்கட்டளை (B) பில்லுக்களஞ்சியம்

(C) கூலித்தொழிலாளர் கூட்டமைப்பு (D) பில்லுச்சேரி மீன் வளர்ப்பு.

*விடை :* ______

31. ஏவுகணையிலுள்ள தீயை அணைக்கப் பயன்படும் நீர்மம்

(A) ஹைட்ரஜன் (B) ஆக்சிஜன்

(C) நைட்ரஜன் (D) ஆர்கான்.

*விடை :* ______

32. உலக இன்னல்களுக்கெல்லாம் காரணம்

(A) செல்வத்தின் மேல் ஆசை கொள்வது

(B) சொத்துக்களைப் பொதுவுடைமை ஆக்குவது

(C) செல்வம் ஓரிடத்தில் குவிவது

(D) வேலையாட்களுக்குச் சொத்துக்களை அளிப்பது.

*விடை :* ______

33. வகர உடம்படுமெய் இடம்பெற்ற தொடர்

(A) காயழகு (B) இலையழகு

(C) பூவழகு (D) கனியழகு.

*விடை :* ______

34. வெண்பாவின் ஓசை

(A) துள்ளலோசை (B) செப்பலோசை

(C) அகவலோசை (D) தூங்கலோசை.

*விடை :* ______

35. வீரசைவத்திற்குப் புத்துயிர் அளித்த மகான்

(A) பசவண்ணர் (B) சிவயோகி மகரிஷி

(C) வேதநாயகம் பிள்ளை (D) மாஸ்தி வேங்கடேசர்.

*விடை :* ______

36. இளைஞனே, நீ இமையைத் திறந்தால்

(A) பூகம்பங்கள் (B) கொட்டும் அருவிகள்

(C) சுனாமிகள் (D) சூர்யோதயங்கள்.

*விடை :* ______

www.StudyGuideIndia.com

37. நெட்டெழுத்துக்களின் மாத்திரை அளவு

(A) மூன்று (B) இரண்டு

(C) நான்கு (D) ஒன்று.

*விடை :* ______

38. தொழிலாகு பெயருக்கு எடுத்துக் காட்டு

(A) கார் அறுத்தான் (B) வெள்ளை அடித்தான்

(C) முழம் வாங்கினான் (D) பொங்கல் உண்டான்.

*விடை :* ______

39. மரபுச் சொற்றொடரை எடுத்தெழுதுக.

(A) வேப்பங்கன்று (B) ஆட்டுப்பாகன்

(C) பசுக்குட்டி (D) பனை இலை.

*விடை :* ______

40. மனோன்மணிக்கேற்ற மணவாளன்

(A) நடராஜன் (B) புருசோத்தமன்

(C) குடிலன் (D) சகடன்.

*விடை :* ______

41. இரட்டைக் கிளவி எது ?

(A) எறி எறி (B) விடு விடு

(C) கிறு கிறு (D) நட நட.

*விடை :* ______

42. தேசிக விநாயகம் பிள்ளை எவ்வாறு போற்றப்பட்டார் ?

(A) கவியோகி (B) கவியரசு

(C) கவிமணி (D) கவிக்குரிசில்.

*விடை :* ______

43. ஈசன் எந்தை இணையடி நீழலே – இதில் உள்ள விகாரம்

(A) விரித்தல் (B) நீட்டல்

(C) தொகுத்தல் (D) வலித்தல்.

*விடை :* ______

www.StudyGuideIndia.com

44. வாழும் மக்களுக்கு பொதுவானவை எது ?

(A) மழையும், பயிரும் (B) பசியும், பிணியும்

(C) நடையும், உடையும் (D) சீரும், சிறப்பும்.

விடை : ______

45. செய்யுளில் சொல்லின் பொருள் மாற்றத்தை உணர்த்த வரும் அளபெடை

(A) செய்யுளிசை (B) இன்னிசை

(C) சொல்லிசை (D) ஒற்று.

விடை : ______

46. நன்செய் நாடு — இங்கு விளைவது

(A) மிளகு, பயறு, கடலை (B) சோளம், கம்பு, தினை

(C) புல், பூண்டு, மரம் (D) நெல், கரும்பு, வாழை.

விடை : ______

47. வினையாலணையும் பெயர் அல்லாதது

(A) அகழ்வார் (B) கைவாள்

(C) பயில்வார் (D) வருவார்.

விடை : ______

48. குயில் மொழி – இத்தொடர்

(A) உவமைத் தொகை (B) உம்மைத் தொகை

(C) பண்புத் தொகை (D) வினைத் தொகை.

விடை : ______

49. ஒற்றளபெடையில் அளபெடுக்கும் எழுத்துக்கள்

(A) பத்து (B) பதினொன்று

(C) பதினெட்டு (D) பதினாறு.

விடை : ______

50. தமிழக நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்தவர்

(A) கவிஞர் சுரதா (B) இறையடியான்

(C) டாக்டர். சண்முக சுந்தரம் (D) டாக்டர். அ. சங்கரி.

விடை : ______

www.StudyGuideIndia.com

## பகுதி – B

***குறிப்பு :*** *பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடை தருக :* $11 \times 2 = 22$

51. கடவுளின் செயல்கள் யாவை ? அவற்றை எவ்வாறு செய்கிறார் ?

52. ஐம்பெருங் காப்பியங்களைத் தமிழன்னை எவ்வாறு ஏந்தியுள்ளாள் ?

53. முத்தநாதன் எவ்வாறு அரண்மனைக்குள் நுழைந்தான் ?

54. சோழனின் போர் யானை நாணம் கொண்டு மறைந்து நின்றது ஏன் ?

55. துய்ப்ளே ஆனந்தரங்கப் பிள்ளை குறித்து எவ்வாறு பாராட்டிப் பேசினார் ?

www.StudyGuideIndia.com

56. தீயவழியில் பொருளீட்டியவர் எவ்வாறு துன்புறுகின்றனர் ?

57. யக்ஷகான கோடங்கியின் பணி யாது ?

58. மீன் வளர்க்கும் குத்தகையினை சின்னப்பிள்ளை எவ்வாறு பெற்றார் ?

59. ஔவையார் எதனை நல்ல நிலம் என்று கூறுகிறார் ?

60. அந்தணர் தம் மனைவியிடம் மகிழ்ந்து கூறியது யாது ?

61. ஆனந்தரங்கப் பிள்ளை வாழ்ந்த காலத்தில் இருந்த பழக்க வழக்கங்களுள் ஏதேனும் ஒன்றை எழுதுக.

www.StudyGuideIndia.com

*குறிப்பு : பின்வருவனவற்றிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்குக :* 7 × 2 = 14

62. 'உடல் ஆரோக்கியமாக இருந்தால் தான் உள்ளம் நல்ல நிலையில் இருக்கும்.'

63. ''அரசே எதற்காக இந்த மாறுவேடம்!''

64. ''இது பொறுப்பதில்லை தம்பி ! எரிதழல் கொண்டு வா''

65. ''நீங்கள் உங்கள் இலக்கியப் பணிகளைப் பார்த்துக் கொள்ளுங்கள் ! நான் சொத்துக்களைக் கவனித்துக் கொள்கிறேன்.''

66. ''சாணேற முழம் சறுக்குகிறதே''

www.StudyGuideIndia.com

67. ''சாந்தா பார்பரா நம் ஊருக்கு இணையாகுமா''

68. ''மண்ணுக்குக் கீழாய் மதித்தீரோ பெண்ணினத்தை''

*குறிப்பு : அடிபிறழாமல் எழுதுக :* 1 × 4 = 4

69. ''பெரிய விடமே.......'' என வரும் பாடல்

அல்லது

''தேடக் கிடைக்காத ......... '' என வரும் பாடல்

70. *கீழ்வரும் பகுதியைப் படித்து கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.* 1 × 4 = 4

தமிழ் இனிமையானது; தொன்மையானது; வளமானது; கற்பதற்கு எளிமையானது என்பனவெல்லாம் தமிழர்களே அறியார். தமிழ் இந்திய மொழிகளின் தாய். ஏன் உலக மொழிகளின் தாய் என்ற உண்மையைத் தமிழர்கள் உணர்ந்திருக்க வேண்டும். 'தமிழில் முடியாதது தமிழால் முடியாதது யாதும் இன்று' என்ற துணிவு பிறத்தல் வேண்டும் 'உரையாடும் போதும், எழுதும் போதும், திருத்தமாக இனிய தமிழைப் பயன்படுத்துவோம்' என உறுதி கொள்ளல் வேண்டும்.

*வினாக்கள் :*

1. தமிழர்களே அறியாதவை எவை ?

2. எந்த உண்மையைத் தமிழர்கள் உணர்ந்திருக்க வேண்டும் ?

www.StudyGuideIndia.com

3. தமிழர்களுக்கு எத்தகைய துணிவு பிறத்தல் வேண்டும் ?

4. தமிழர்கள் கொள்ள வேண்டிய உறுதி யாது ?

***குறிப்பு*** *: பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடை தருக :* 3 × 4 = 12

71. தோல் பொம்மை ஆட்டத்தை விளக்கி வரைக.

72. பாரத நாட்டின் பெருமைகளாக திரு. வி. க. கூறுவன யாவை ?

*அல்லது*

அமைதிப்புறாவின் ஆசைகளாக வைரமுத்து கூறுவன யாவை ?

73. சேர்டகாப்பிற்கும் வேலையாட்களுக்கும் இடையே நடந்த உரையாடலை எழுதுக.

*அல்லது*

மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் பெருமைகளாக அந்தணர் கூறுவன யாவை ?

www.StudyGuideIndia.com

74. ஆபுத்திரன் பாத்திரம் பெற்ற நிகழ்ச்சியை விவரி. 1 × 3 = 3

*அல்லது*

செய்ந்நன்றி அறிதல் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

75. ஏவலுக்கும், வியங்கோளுக்கும் உள்ள வேறுபாடுகளைத் தொகுத்தெழுதுக. 1 × 3 = 3

*அல்லது*

பண்புத் தொகையை விளக்கி எடுத்துக்காட்டு தருக.

76. *கீழ்வரும் பழமொழிகளுள் **ஒன்றை** மட்டும் விளக்குக :* 1 × 3 = 3

1. அடிப்பார் அடித்தால் அம்மியும் நகரும்
2. தவளைத் தன் வாயால் கெடும்.
3. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.

www.StudyGuideIndia.com

77. *பின்வருவனவற்றுள் ஏதேனும்* ***ஒன்று*** *குறித்து கட்டுரை வரைக :* 1 × 5 = 5

1. போக்குவரத்து நெரிசல்
2. காடுகளைக் காப்போம்.
3. மத ஒற்றுமையும் மனிதகுல முன்னேற்றமும்.

www.StudyGuideIndia.com

78. *கடிதம் எழுதுக :* $1 \times 5 = 5$

உன் பள்ளியில் நடைபெற்ற விழாவின் சிறப்பை விளக்கி, உன் நண்பனுக்கு/தோழிக்கு மடல் ஒன்று வரைக.

*அல்லது*

நீ வாழும் பகுதியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தருமாறு நகராண்மைக் கழக ஆணையருக்கு விண்ணப்பம் ஒன்று வரைக.

www.StudyGuideIndia.com